தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **info@tsch.org.au**

அரையாண்டுப் பரீட்சை 2025

ஆண்டு: கூட்டு வகுப்பு உயர்நிலை திகதி: 21.06.2025

நேரம்: 2 1/2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி சத்தியதேவி பாலகங்காதரன்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	15	
வினா 2	10	
வினா 3	15	
வினா 4	20	
வினா 5	20	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

– BLANK PAGE –

வினா இல	1	புள்ளிகள்	15	பக்கம்	3

கீழே உள்ள சொற்களில் 5 சொற்களைத் தேர்ந்தெடுத்து நான்கு சொற்களுக்குக் குறையாது வாக்கியம் எழுதுக.

1. வணக்கம்

2. சனிக்கிழமை

3. தமிழ்

4. நண்பர்கள்

5. பிறந்த நாள்

6. உடற்பயிற்சி

7. பெண்கள்

8. திருமணம்

9. ஓய்வுநேரம்

வினா இல	2	புள்ளிகள்	10	பக்கம்	4

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட சொல்லின் பொருளை உணர்த்தும் மிகப் பொருத்தமான சொல்லை கோடிடுக.

1. சிலருக்கு காற்பந்து விளையாடுவதில் **நாட்டம்** அதிகம்.

   1. திறமை 2. மகிழ்ச்சி 3. கவனம் 4. பிரியம்

2. நாம் **தெருவில்** குப்பை போடக்கூடாது.

   1. வெளியில் 2. வீதியில் 3. பூங்காவில் 4. பொது இடங்களில்

3. **தினமும்** உடற்பயிற்சி செய்வது உடலுக்கு நல்லது.

   1. நாள்தோறும் 2. ஓவ்வொரு முறையும் 3. நேரமுள்ளபோது 4. அடிக்கடி

4. நாம் பெரியோரின் **அறிவுரையைக்** கேட்டு நடக்கவேண்டும்.

   1. உத்தரவை 2. புத்திமதியை 3. காரியத்தை 4. கட்டளையை

5. அழகான இயற்கைக் காட்சிகள் பார்ப்பவர் மனத்தை எளிதில் **ஈர்க்கின்றன**.

   1. தாக்குகின்றன 2. கவர்கின்றன 3. மாற்றுகின்றன 4. திருப்புகின்றன

வினா இல	3	புள்ளிகள்	15	பக்கம்	5



மேலே கொடுக்கப்பட்டுள்ள விளம்பரத்தைப் பார்த்து வினாக்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக

1. சித்திரைப் புத்தாண்டு பெருவிழாவுக்கு ஆதரவு வழங்குபவர்கள் யாவர்?

2. இது எப்போது நடைபெற்றது?

3. இப்படத்தில் பார்க்கும் இரண்டு தமிழர் பாரம்பரிய உடையின் பெயர்களை எழுதுக?

4. இங்கு நிறைகுடத்தில் வைக்கப்பட்டிருக்கும் இரண்டு பொருட்களின் பெயர்களை எழுதுக?

5. இந்த நிகழ்வுக்குச் செல்ல அனுமதி விபரம் யாது?

வினா இல	4	புள்ளிகள்	20	பக்கம்	7

மாம்பழம்

அடியில் காணும் பனுவலைப் படிக்க: வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழர்கள் மூன்று பழங்களை மிகவும் விரும்பி உண்டு வருகிறார்கள். ஆவை மா, பலா, வாழை என்பவை ஆகும். தமிழர்கள் வாழைப்பழத்தைப் போன்றே மாம்பழத்தையும் மங்கலப் பொருளாகவே கருதுகிறார்கள். மாவிலையையும் மங்கலப் பொருள்களுள் ஒன்றாகக் கருதுகிறார்கள். அதை வீடுகளிலும் கோயில்களிலும் தோரணங்களாகக் கட்டுகிறார்கள்.

தமிழர்கள் மாங்காயை ஊறுகாய் செய்கிறார்கள்; குழம்புகளிலும் பயன்படுத்துகிறார்கள். மேலும், அவர்கள் மாம்பழத்தை உண்கிறார்கள்; 'ஜாம்' செய்து டப்பிகளில் அடைத்து விற்கிறார்கள். இன்று பலரும் மாம்பழச் சாற்றை விரும்பிக் குடிக்கிறார்கள்.

இந்தியாவில் மட்டும் ஏறக்குறைய ஆயிரம் வகை மாமரங்கள் உள்ளன. இந்தியாவில் மும்பை, புனே, கோவா, சென்னை போன்ற இடங்களில் வாழ்பவர்கள் சிறந்த பழங்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தமிழர்கள் கூறும் முக்கனிகள் யாவை?

_____

_____

2. தமிழர்கள் மங்களப் பொருளான மாவிலையை எதற்குப் பயன்படுத்துகிறார்கள்?

_____

_____

3. தமிழர்கள் மாங்காயை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள்?

_____

_____

_____

4. இந்தியாவில் எந்தெந்த இடங்களில் சிறந்த மாம்பழங்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கிறார்கள்.

5. தமிழர்கள் மாங்காய், மாம்பழம் என்பவற்றை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு ஐந்து விளக்கங்கள் தருக.

வினா இல	5	புள்ளிகள்	20	பக்கம்	9

கீழே தரப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக.

தேறியுள்ளேன் அறிந்தேன் உன்னை அடைந்துள்ளேன் படைத்துள்ளேன் உணர்கிறேன் விரும்புகிறேன் கடிதம் திளைத்தனர்

அன்புள்ள ஆனந்தனுக்கு,

நான் இங்கு நலமாக இருக்கிறேன். உனது நலமறிய ஆவல். நீ எழுதிய அன்பான---------- ---------- கிடைத்தது. விவரங்கள் யாவும்----------.

ஆனந்தா! ஊனக்குச் செய்தி தெரியுமா? நான் என் பள்ளி ஆண்டிடைத் தேர்வில் சிறப்பாக----------. குறிப்பாகக் கணிதத்திலும், அறிவியலிலும் நான் சிறப்புத் தேர்ச்சி----------. இதற்கெல்லாம் காரணமாண---------- எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. நீ இடைவிடாது எனக்கு அளித்த ஊக்கத்தினால் இன்று நான் சாதனை----------. என் தேர்வு முடிவுகளைக் கண்ட என் பெற்றோர்_ஆனந்தத்தில்----------. அன்று நீ கூறியது எவ்வளவு உண்மையாகிவிட்டது பார்த்தாயா? ‘‘கடின உழைப்பு இருந்தால் எவரும் நிச்சயம் வெற்றி அடையலாம்’’ என்றாய். அந்த அரிய கருத்தை நான் இப்போது----------

என் நலனில் அக்கறை கொண்டு உதவிய உனக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள----------. மற்றவை உன் கடிதம் கண்டு.

என்றும் அன்புள்ள

உன் தோழன்

அரவிந்தன்

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	10

கேட்டல் வினாக்கள்

ஓவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை எழுதுக.

1. மாணவர்கள் முதியவர்களுக்கு எந்த வகையில் உதவி செய்தார்கள்?

    1. அவர்களுக்குப் பரிசுப் பொருள்கள் கொடுத்தார்கள்.
    2. முதியோர் இல்லத்தைச் சுத்தம் செய்தார்கள்.
    3. அவர்களுடன் மகிழ்ச்சியாகப் பொழுது போக்கினார்கள். ( )

2. முதியவர்கள் ஏன் கவலை அடைந்தார்கள்?

    1. மாணவர்கள் அவர்களுடன் விளையாடததால்
    2. மாணவர்கள் அவர்களிடமிருந்து விடைபெற்றுச் சென்றதால்
    3. மாணவர்கள் அவர்களைப் பார்த்து அழுததால் ( )

3. முரளியின் பாட்டி ஏன் அவனைப் பிரியமாட்டேன் என்று கூறினார்?

    1. அவன் அவருக்கு உணவு கொடுப்பதால்
    2. அவன் அவருடன் விளையாடுவதால்
    3. அவன் குடும்பத்தினர் அவரை அன்போடு பார்த்துக்கொள்வதால்

4. ஏன் சில முதியவர்கள் ஆதரவை நாடி முதியோர் இல்லங்களில் சேர்கிறார்கள்?

5. முதியவர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பாமல் எப்படியெல்லாம் பராமரிக்கலாம் என்பது பற்றி இரண்டு கருத்துக்கள் எழுதுக.